# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் கலைஞர் அறிவாலயத்தில், இந்தி திணிப்பை எதிர்த்து, தாய் தமிழுக்காக தன்னையே தியாக தீப்பந்தமாக மாற்றி, இன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளில், அவர்களின் திருவுருவப் படத்திற்கு கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கரூர் மாவட்டத்தை சேர்ந்த மொழிப்போர் தியாகிகளுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கினார். மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், வழக்கறிஞர் என். மணிராஜ், பரணி கே.மணி, சுப.ராஜகோபால், எம் எல்ஏ.க்கள், இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ க. சிவகாமசுந்தரி, மாவட்ட நிர்வாகிகள் டி ராஜேந்திரன், எம் எஸ்கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், மாநகரக் கழக செயலாளர் எஸ் பி கனகராஜ், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர் கள், மாநகர பகுதி ஒன்றிய பேரூர் செயலாளர்கள் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கோவை சிங்காநல்லூர் கரும்புக்கடை மைதானத்தில் மாநகர் மாவட்ட திமுக மற்றும் மாநகர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர் அணி அமைப்பாளர் வி.சிவப்பிரகாஷ் வரவேற்புரையாற்றினார் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமைக் கழகப் பேச்சாளர் நெல்லை ஜான் ஆகியோர் வீரவணக்க நாள் சிறப்புரையாற்றினர் இக்கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்பி. கழக சொத்துப் பாதுகாப்புக் குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி,* கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து மாவட்ட துணைச்செயலாளர்கள் தளபதி இளங்கோ, கல்பனா செந்தில் மாவட்ட பொருளாளர் S.M.P. முருகன் சிங்காநல்லூர் பகுதி2 கழக செயலாளர் சிங்கை மு.சிவா MC. மாநகர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பாண்டி, ஆர்.நந்தகுமார், ஆர்.ஸ்ருதிபிரியா, கோவை ஜெகதீஷ், 61வது வார்டு செயலாளர் தென்னவர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பைந்தமிழன் நன்றி கூறினார்.



நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் விக்ரமசிங்க புரம் மேலரதவீதியில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் கணேசன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் பங்கேற்று உரையாற்றினார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சா.ஞானதிரவியம்,சித்திக்,கே.கே.சி. பிரபாகரன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாநில நிர்வாகிகள் ராஜம் ஜான், ஆவின் ஆறுமுகம்,கணேஷ்குமார் ஆதித்தன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் நீத்த போராளிகள் கீழப்பழுர் சின்னசாமி அவர்களின் தியாகத்தைப் போற்றும் வண்ணம், கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி சார்பில் விருத்தாசலம் வானொலித்திடலில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வி.கணேசன் தலைமையில் கழக பேச்சாளர் சோம.செந்தமிழ்செல்வன்,மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் ரமேஷ் முன்னிலையில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் செலுத்தி , சிறப்புரையாற்றினார்.உடன் மாவட்ட கழக நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நெல்லை டவுண் பேட்டை மல்லிமால் தெருவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கல்லூர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர். விஜலா சத்யானந்தன்,துணை மேயர் ராஜ்,தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன்,முன்னாள் மேயர் சரவணன்,துணை செயலாளர் சுரேஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ராமேசுவரத்தில் திமுக மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் மத்திய அரசு கொண்டு வர நினைத்த மும்மொழி கொள்கையை தடுத்து நிறுத்தி இரு மொழி கொள்கையை தந்தை பெரியார் நினைத்ததை செய்து முடித்த பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் , அந்த வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் செயல்படுவதாக முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் உரையாற்றினார். இந்த கூட்டத்தில், மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர்கள் வ.சத்தியமூர்த்தி,சுந்தரராஜன்,மாவட்ட கழக பொருளாளர் செ.முருகேசன் எம்.எல்.ஏ.,மாவட்ட துணைச் செயலாளர்கள் கொ.கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கோ.ரா.மணிமுடி சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில், நகர் கழக செயலாளர் கே.இ.நாசர்கான் வாழ்த்துரை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் செ.சுரேஷ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஸ்டாலின்(எ)கமலக்கண்ணன்,பொன்மணி சங்கர்,சம்பத்குமார், மற்றும் மாநில நிர்வாகிகள் என்.நல்லசேதுபதி, இராமர்,பா.குணசேகரன், பாஸ்கரன், நகர் கழக செயலாளர்கள் ஆர்.கே.கார்மேகம், டி.ஆர். பிரவீன்தங்கம், சேதுகருணாநிதி, ஜீவரெத்தினம், நகர் மன்ற துணைத்தலைவர் தட்சிணாமூர்த்தி(எ) பிச்சை, மற்றும் நகர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.




தூத்துக்குடி தெற்கு மாவட்டம் சார்பில் திருச்செந்தூரில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆலோசனைப்படி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அருண்குமார் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா,தலைமை செயற்குழு உறுப்பினர் அ.பிரம்ம சக்தி,திருச்செந்தூர் நகர் மன்றத் தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட்செல்வின்,மாவட்ட அமைத்தலைவர் அருணாச்சலம், மாவட்ட துணைச் செயலாளர் ஆறுமுகபெருமாள்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் டாக்டர் வெற்றிவேல்,ஒன்றிய செயலாளர்கள் ஏ,பி. செங்குழி ரமேஷ்,சதீஷ்குமார்,கோட்டாளம் பி.ஜி.ரவி,பாலமுருகன்,ஜோசப், பார்த்திபன்,இசக்கி பாண்டி, கொம்பையா,சுரேஷ் காந்தி, சுப்பிரமணியன் ஜெயகொடி, இளங்கோ,சதீஷ்குமார்,நகரச் செயலாளர் வாள் சுடலை,திருச்செந்தூர் நகர் மன்ற உறுப்பினர்கள் ரேவதி கோமதி நாயகம்,முத்து ஜெயந்தி,மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் ஜெஸ்ஸி பொன் ராணி,மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஜனகர்,துணை அமைப்பாளர் பாக்யராஜ்,நாசரேத் நகர செயலாளர் ஜமீன் சாலமோன், தென்திருப்பேரை நகரச் செயலாளர் முருகப்பெருமாள், ஆழ்வார் திருநகரி கோபி, ஸ்ரீவைகுண்டம் சுப்புராஜ், காயல்பட்டினம் நகர செயலாளர் முத்து முகம்மது,காயல்பட்டினம் கவுன்சிலர் சுகு,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சாரதா பொண் இசக்கி,மாவட்ட துணை செயலாளர் தங்கம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தஞ்சை வடக்கு மாவட்ட திமு.க மாணவர்அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு கும்பகோணம் மாநகர கழக பணிமனை வாயிலில் மொழிப்போர் தியாகிகளின் திருவுருவ படத்திற்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் டி.கணேசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.ராஜேஸ், க.வினோத்குமார், எஸ்.சூர்யா, சௌ.தேவராஜன் உள்ளிட்ட பகுதி செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.